**இலங்கை நீதிபதிகளின் நிறுவனத்தின் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான அறிக்கை - 2019**

இலங்கை நீதிபதிகளின் நிறுவனத்தின் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பான இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது கண்காணிப்பின் கீழ் கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்டது.

**1.2 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

2018 இன் 19 தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் 16(1) பிரகாரம் அனைத்து கணக்காய்வுக்கு உட்படுத்தப்படும் நிறுவனத்தினாலும் அந்த நிறுவனம் தொடர்பில் வருடாந்த மற்றும் கால ரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்குமுடியுமான வகையில் தமது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பில் உரிய முறையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணிச் செல்லப்பட வேண்டும். அந்த அதிகாரச்சட்டத்தின் 16(2) பிரிவின் பிரகாரம், அனைத்து கணக்காய்வுக்கு உட்படுத்தப்படும் நிறுவனம் தொடர்பிலும் வருடாந்த நிதிக்கூற்றுக்கள், விதிகளின் மூலம் காண்பிக்கப்படக்கூடிய காலப்பகுதியினுள் அந்த நிறுவனங்களின் வருடாந்த செயலாற்றல் அறிக்கைகளுடன் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டும். அந்த அதிகாரச்சட்டத்தின் 38(1)(ஈ) பிரிவின் பிரகாரம், வருடாந்த அறிக்கைகள் மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்கள் தேவையான காலப்பகுதியினுள் தயாரிக்கப்படுகின்றமை இடம்பெறுவதாக சான்றுபடுத்த வேண்டியதுடன், அதற்கு மேலதிகமான கணக்காய்வுக்கு உட்படுத்தப்படும் நிறுவனத்திற்கு உரிய ஆண்டறிக்கைகளை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் பொறுப்புடன் செயற்பட வேண்டும். அவ்வாறான போதிலும், 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவு மற்றும் 2004 பெப்ரவரி 24 ஆந் திகதிய 01/2004 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம் நியதிச்சட்ட சபைகளின் நிதிக்கூற்றுக்கள் நிதியாண்டு நிறைவடைந்து 60 நாட்களினுள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டிய போதிலும், 2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2021 மார்ச் 26ஆந் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2. கணக்காய்வு அவதானிப்புகள்**

**2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் முகாமைத்துவ தீரமானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- |
| **(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை** | | | |
| (i) நிதிப்பிரமாணம் 110 | நட்டங்கள் தொடர்பாக பதிவு செய்வதற்காக திட்டவட்டமான மாதிரிக்கமைய நட்டங்கள் தொடர்பான பதிவேடொன்றினை நாளதுவரையாக பேணப்பட்டிருக்கவில்லை. | நட்டங்கள் தொடர்பான பதிவேடொன்று பேணப்பட்டிராததுடன், அந்த பதிவேட்டினை ஆரம்பிப்பதற்க நடவடிக்கை எடுக்கப்படும் | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன். | |
| (ii) | நிதிப்பிரமாணம் 395(ஈ) | 2019ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த வங்கி இணக்கக்கூற்றில் நிறுவனத்தின் பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர் ஒருவர் கையொப்பமிட்டிராததுடடன், அந்த வங்கி இணக்கக்கூற்றின் பிரகாரம், 2019 திசெம்பர் மாதம் முதல் இணங்காணப்படாத ரூபா 5,539,787ஆன மீதியொன்று நிலவியது. | 2019.12.31ஆந் திகதியில் உள்ளபடியாக உரிய முறையில் வங்கி இணக்கக்கூற்றுகள் தயாரிக்கப்பட்டிராதது டன், காசுப்புத்தகத்தின் பிரகாரம், வங்கி மீதியானது ரூபா 7,142,089.51 ஆகும். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (iii) | நிதிப்பிரமாணம் 1646 | பயணங்கள் தொடர்பான மாதாந்த பொழிப்பு அறிக்கையொன்று அதன் மூலப்பிரதிகளுடனான அந்தந்த மாதத்திற்குரிய நாளாந்த ஓட்ட அட்டவணைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (iv) | நிதிப்பிரமாணம் 1653 | வாகனத்தினை பயன்படுத்திய உத்தியோகத்தரால் நாளாந்த ஓட்டக்குறிப்புகள் கையொப்பமிடப்படாத பல்வேறு சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. | பதவேடுகள் தாமதமின்றி கையொப்பமிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ஆ) | 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க சுற்றறிக்கை | மேற்படி சுற்றறிக்கையின் பிரகாரம் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டுக்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தினை தயாரிக்கும் போது, தாங்களால் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளும் உள்ளடங்கும் வகையில் அதனை தயாரிப்பதாக தெரிவித்துக்கொள்கின்றேன். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2016 திசெம்பர் 29ஆந் திகதிய 30/2016ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 3.1ஆம் பந்தி | நிறுவனத்தின் வாகனங்களுக்காக எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உரிய ஏற்பாடுகளுக்கமைய எதிர்காலத்தில் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | 2018 சனவரி 24ஆந் திகதிய 02/2018ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | மேற்படி சுற்றறிக்கையின் இணைப்பு இலக்கம் 01 இன் மாதிரிக்கமைய நிறுவனத்தின் சேவையில் ஈடுபட்டுள்ள ஒட்டுமொத்த பதவியணிக்காக வருடாந்த செயலாற்றல் உடடன்படிக்கை கையொப்பமிடப்பட்டிராததுடன், பின்னிணைப்பு இலக்கம் 02இன் மாதிரிக்கமைய நிறுவனத்தின் மனிதவள அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2021ஆம் ஆண்டிற்காக மனிதவள அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**2.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| நிறுவனத்தின் மூலதன செலவினங்களுக்காக ரூபா 6.5 மில்லியன் நிதியேற்பாடு அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், அது பயன்படுத்தப்பட்டிராமையால் ஒட்டுமொத்த நிதியேற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | மதிப்பீடுகளை தயாரிக்கும் போது அவற்றை நிறைவேற்றுவதற்கான இயலுமை தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டும். |

**2.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், விசேட செயலமர்வுகளின் கீழ் உயர் நீதிமன்ற நீதிபதிகளுக்காக 04 செயலமர்வுகள், மாவட்ட நீதிபதிகளக்காக 06 செயலமர்வுகள், நீதவான் நீதிமன்றத்தின் நீதிபதிகளுக்காக 06 செயலமர்வுகள் மற்றும் க்வாசி நீதிபதிகளக்காக 02 செயலமர்வுகள் எனுமாறு 18 செயலமர்வுகளை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், உயர் நீதிமன்ற நீதிபதிகளுக்காக | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | செயல்நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட இலக்குகளை அடைந்துகொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செயலமர்வொன்றும், நீதிமன்ற அலுவலகர்களுக்கான செயலமர்வுகள் 02 மற்றும் க்வாசி நீதிபதிகளுக்காக செயலமர்வொன்று எனுமாறு 04 விசேட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன. | | |
| (ஆ) | செயல்நடவடிக்கைத் திட்டத்தின் இயலளவு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நீதிபதிகளுக்காக நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டிருந்த நீதிபதிகளின் கருத்துக்களை முன்வைக்கும் செயலமர்வு (Presentation Symposium of Judges) மற்றும் ஆராய்ச்சி நடைமுறைகள் தொடர்பான பாடநெறிளை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | செயல்நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட இலக்குகளை அடைந்துகொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**2.4 பெறுகைகள் முகாமைத்துவம்**

---

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின 9.8(அ) உப பிரிவின் பிரகாரம், பெறுகை நிறுவனம் விரும்பினால் பொதுவான விளம்பர நடைமுறைகளுக்கு புறம்பாக, பெறுகைகள் அழைப்பொன்றினை வலைதளத்தில பிரசுரிக்க இயலுமான போதிலும், 2019 சனவரி 12 மற்றும் 13ஆகிய திகதிகளில் இந்தியாவில் இடம்பெற்ற | இந்த சேவையானது அவசர தேவைப்பாடு தன்மையின் அடிப்படையில் மின்னஞ்சல் ஊடாக கூறுவிலைகள் கோரப்பட்டு குறித்த பயணச்சீட்டுகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. | அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பயிற்சிக்காக பங்குபற்றுவதற்கான விமானச் சீட்டுகளை கொள்வனவ செய்வதற்காக மின்னஞ்சல் ஊடாக (email) கூறுவிலை கோரப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின 9.8(ஈ) பிரிவிற்கு முரணாக 03 சந்தர்ப்பங்களில் இலத்திரனியல் ஊடகங்களை பயன்படுத்தி கூறுவிலைகள் பெறப்பட்டிருந்தன. | இந்த சேவையானது அவசர தேவைப்பாடு தன்மையின் அடிப்படையில் மின்னஞ்சல் ஊடாக கூறுவிலைகள் கோரப்பட்டுள்ளன. | அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (இ) | நிறுவனத்தில் நடாத்தப்படும் செயலமர்வுகளின் உபசரணை நடவடிக்கைகளுக்காக மற்றும் நிறுவத்தின் சுத்திகரிப்பு பணிகளுக்காக 2019 சனவரி மாதம் 01முதல் 2019 யூன் 30ஆந் திகதி வரையிலும் உடன்படிக்கை எதுவுமின்றி முறையே, ரூபா 103,125 மற்றும் ரூபா 257,303 செலுத்தப்பட்டிருந்தது. | தற்போது உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுகின்றன. | பெறுகைகள் நடைமுறையை கால அடிப்படையில் மேற்கொண்டு உடன்படிக்கை கைச்சாத்திட்டு கொடுப்பனவுகளை மேற்கொள்ள வேண்டும். |

**2.5 பதவியணி முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 24 மற்றும் உள்ளபடியான பதவியணி 13 ஆனமையால் வெற்றிடங்களின் எண்ணிக்கை 11 ஆகும். அது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 46 சதவீதம் ஆகும். | தற்போது வெற்றிடங்களை நிரப்புவதற்கு உரிய ஆட்சேர்ப்புகளை மேற்கொள்ளும் பணிகள் முன்னெடுக்கப்பட்டவாறு உள்ளது. | அத்தியாவசியமான பதவிகளில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |